7th May 1957] [Mr. Speaker]

11 Sri R. Krishnasami Naidu.
12 ,, M. P. Periaswami.
13 ,, M. Kandasamy Padayachi.
14 ,, P. G. Karuthiruman.

Sri V. K. Kothandaraman, Sri T. Veluchami and Sri K. S. G. Haja Sheriff have since withdrawn their candidature. As the number of candidates who were duly nominated and who have not withdrawn their candidature is equal to the number of vacancies to be filled, viz., eleven, I hereby declare them to have been duly elected to the House Committee.

Under Rule 214 (1) of the Madras Assembly Rules, I hereby nominate (1) Srimathi Rajathi Kunjithapatham, (2) Sri A. A. Rasheed, (3) Sri S. B. Adityan and (4) Sri V. K. Kothandaraman to be members of the House Committee.

The Deputy Speaker is the ex-officio Chairman of the Committee.

### (2) NOMINATION OF CHAIRMEN TO ESTIMATES AND PUBLIC ACCOUNTS COMMITTEES.

MR. SPEAKER: I have also to announce to the House that under rule 164 of the Madras Assembly Rules, I nominate Sri K. R. Viswanathan to be the Chairman of the Committee on Estimates and under rule 172 of the same Rules, I nominate Sri V. K. Ramaswami Mudaliar to be the Chairman of the Committee on Public Accounts.

### (3) ELECTION OF MEMBERS TO THE PRIVILEGES COMMITTEE.

MR. SPEAKER: I have to announce to the House that the following fifteen Members were duly nominated for the election of fifteen Members of the Madras Legislative Assembly to the Committee of Privileges:—

1. Sri M. Selvaraj.
2. ,, D. Subramania Rajakumar.
3. ,, K. Ramachandran.
4. ,, K. Sattanatha Karayalar.
5. ,, A. R. Marimuthu.
6. Dr. E. P. Mathuram.
7. Sri R. Srinivasa Iyer.
8. ,, V. S. Manickasundaram.
9. ,, A. Mariappan.
10. ,, T. V. Sannasi.
11. ,, A. R. Subbiah Mudaliar.
12. ,, B. K. Linga Gowder.
13. ,, A. Chidambaranatha Nadar.
14. ,, V. K. Krishnamurthi.
15. ,, P. G. Karuthiruman.

[Mr. Speaker] [7th May 1957

As the number of candidates validly nominated is equal to the number of vacancies to be filled, viz., fifteen, I hereby declare them to have been duly elected to the Committee of Privileges. The Deputy Speaker is ex-officio a member of the Committee.

Under sub-rule (4) of rule 178 of the Madras Assembly Rules, I nominate Sri K. Ramachandran to be the Chairman of the Committee.

## VII.—DISCUSSION ON THE GOVERNOR'S ADDRESS—(*cont.*)

**Mr. SPEAKER :** இப்பொழுது கவர்னருடைய பேருரையைப்பற்றி விவாதம் தொடரப்படும். அரசாங்கத்தின் சார்பாக கனம் நிதி அமைச்சர் அவர்கள் பேசுவார்.

**The Hon. Sri C, SUBRAMANIAM :** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த நான்கு தினங்களாக கவர்னர் உரையின் பேரில் விவாதம் நடந்து வந்திருக்கிறது. ஒரு நாள் அந்த விவாதத்தின் போது நான் இங்கே இருக்க முடியவில்லை. மற்ற நாட்களில் விவாதம் நடந்தபோது நான் நேரில் கேட்டு வந்திருக்கிறேன். நான் வராத நாள் நடந்த விவாதத்தை பத்திரிகையின் மூலமாகவும் இங்கே எடுத்திருக்கக் கூடிய (ரிப்போர்ட்டு) அறிக்கையின் மூலமாகவும் பேசிய விஷயங்கள் எல்லாவற்றையும் ஓரளவு தெரிந்து கொண்டிருக்கிறேன். இங்கே நடந்த விவாதம் நாம் எல்லோரும் பெருமைப்படக்கூடிய முறையிலே, நல்ல முறையிலே நடந்து இருக்கின்றது என்கின்ற பாராட்டுதலை முதலில் தெரிவித்துக்கொள்ளவிரும்புகிறேன்.

இந்த புதிய சபைக்கு வந்திருக்கக் கூடிய நாம் எல்லோரும், அடுத்த ஐந்து வருஷத்திற்கு நம் தமிழ் நாட்டினுடைய முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் செய்யக் கூடிய பெரும் பொறுப்பை மக்கள் நம் எல்லோருடைய பேரிலும் சாட்டி இருக்கிறார்கள் என்பதை முதன்முதலில் நன்றாக மனதில் வைத்துக் கொள்ள வேண்டும். இது விஷயத்தில் கட்சிகளைப்பற்றி யோசிக்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்தச் சபையைப் பொறுத்தவரையில், எல்லா அங்கத்தினர்களுக்கும் இந்த பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பை நல்ல முறையிலே நாம் ஏற்று நிர்வகிப்பதற்கு, எந்த முறையில் நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியும் நான் ஒரு சில வார்த்தைகளைச் சொல்லுவேனேயானால் ஏதோ உபாத்தியாயர் மாணாக்கர்களுக்குப் பாடம் கற்பிப்பது போல பாடம் கற்பிக்க வந்திருக்கிறேன் என்று நினைக்கக் கூடாது, நினைக்கவும் மாட்டார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் இது ரொம்பவும் முக்கியமான விஷயம். நாம் எவ்வளவு நல்ல முறையில் சபையை நடத்துகிறோமோ, எவ்வளவு நல்ல தீர்மானங்களை நாம் இங்கே செய்கிறோமோ, அந்த அடிப்படையில்தான் நம்முடைய நாட்டின் முன்னேற்றமும் நல்ல முறையில் செல்ல முடியும் என்பதை நான் பூரணமாக உணருகிறேன். அதன் காரணத்தால்தான் ஒரு சிலருக்கு இதைப்பற்றி தப்பு அபிப்பிராயம்படக்கூடிய ஒரு நிலைமை ஏற்பட்டாலும் கூட, என்னுடைய கடமையை நிறைவேற்ற வேண்டும் என்கிற முறையில் ஒரு சில வார்த்தைகளைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அரசியல் சட்டத்தின் கீழ் "பார்லிமெண்டரி டெமாக்ரசி" என்கிற அந்த முறையில்தான் அரசாங்கத்தை நடத்த வேண்டும் என்று நமக்கு நாமே விதித்துக்கொண்டிருக்கிறோம். அதிலே ஒரு கட்சியார் அரசாங்கப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டியதாக இருக்கிறது. வேறொரு கட்சி எதிர்க் கட்சியாகவும் இருக்கவேண்டியிருக்கிறது. எந்தக் கட்சி அதிகப்படியாக இருக்கிறதோ அந்தக் கட்சி அரசாங்கத்தை ஏற்று நடத்த வேண்டும். மற்ற கட்சிகளும் இருக்கும். அவைகளில் அதிகமாக இருக்கக் கூடிய ஒன்று எதிர்க் கட்சியாக இருக்கக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. அரசாங்கத்தின் சார்பாக இருக்கக்கூடிய கட்சி, எதிர்க் கட்சி, ஆகிய இந்த இரண்டு கட்சிகளும் அவசியம். அரசாங்கம்